# ஜனவரி – 16 – செவ்வாய்

**புனித யோசப்வாஸ் அடிகள்**
**என் ஊழியன் தாவீதைக் கண்டுபிடித்தேன்:திபா. 89:20**
--------------------------------------------------------------------

## முதல் வாசகம் : 1 சாமுவேல் 16 : 1 – 13

ஆண்டவர் சாமுவேலை நோக்கி, ”இஸ்ரயேலின் அரசராகச் சவுல் இல்லாதவாறு நான் அவனைப் புறக்கணித்ததை நீ அறிந்திருந்தும், நீ எவ்வளவு காலம் அவனுக்காகத் துக்கம் கொண்டாடுவாய்? உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன் ஏனெனில் அவன் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன்” என்றார். அதற்குச் சாமுவேல் எப்படிப்போவேன்? சவுல் கேள்விப்பட்டால், என்னைக் கொன்றுவிடுவானே? என்றார். மீண்டும் ஆண்டவர் நீ ஒரு கன்றுக்குட்டியை எடுத்துச் செல்! ”ஆண்டவருக்கு பலியிட வந்துள்ளேன்” என்று சொல். ஈசாயைப் பலிக்கு அழைத்திடு. அப்போது நீ செய்யவேண்டியது என்னவென்று உனக்கு நான் தெவிவிப்பேன் நான் உனக்குக் காட்டுகிறவனை நீ எனக்காகத் திருப்பொழிவு செய்” என்றார். ஆண்டவர் கட்டளையிட்டவாறு சாமுவேல் செய்த பின் பெத்லகேமுக்குச் சென்றார். அப்பொழுது அவ்வூரின் பெரியோர்கள் அஞ்சி நடுங்கி அவரை எதிர் கொண்டு வந்து, உங்கள் வருகையின் நோக்கம் சமாதானம் தானே” என்று கேட்டனர். அதற்கு அவர், ”ஆம் சமாதானம்தான் ஆண்டவருக்குப் பலி செலுத்த வந்துள்ளேன் உங்களையே தூய்மையாக்கிக் கொண்டு என்னுடன் பலியிட வாருங்கள்” என்றார். மேலும் ஈசாயையும் அவர் புதல்வரையும் தூய்மைப்படுத்திப் பலியிட வருமாறு அழைத்தார். அவர்கள் வந்தபோது அவர் எலியாவைப் பார்த்தவுடனே, ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவனாகத்தான் இருக்கும் ”என்று எண்ணினார். ஆனால் ஆண்டவர் சாமுவேலிடம், அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே ஏனெனில் நான் அவனைப் புறங்கணித்துவிட்டேன். மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர் ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார் ”என்றார். அடுத்து, ஈசாய் அபினதாபை அழைத்து சாமுவேல் முன்பாக கடந்துபோகச் செய்தார். அவர் ”இவனையும் ஆண்டவர் தேர்ந்து கொள்ள வில்லை” என்று கூறினார். பிறகு ஈசாய் சம்மாகுவைக் கடந்து போகச் செய்தார். ”ஆண்டவர் இவனையும் தேர்ந்து கொள்ள வில்லை” என்று கூறினார். இவ்வாறு ஈசாய் தம் ஏழு புதல்வரைச் சாமுவேல் முன்பாகக் கடந்துபோகச்செய்தார். இவர்களையும் ஆண்டவர் தேர்ந்து கொள்ளவிலை” என்றார் சாமுவேல். தொடர்ந்து சாமுவேல் ஈசாயைப் பார்த்து ”உன் பிள்ளைகள் இத்தனைப் பேர்தானா?” என்று கேட்க, ”இன்னொரு சிறுவன் இருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருகிறான்” என்று பதிலளித்தார் ஈசாய். அதற்கு சாமுவேல் அவரிடம், ”ஆளனுப்பி அவனை அழைத்து வா ஏனெனில் அவன் வரும்வரை நான் உணவருந்த மாட்டேன்” என்றார். ஈசாய் ஆளனுப்பி அவனை அழைத்து வந்தார். அவன் சிவந்த மேனியும் ஒளிரும் கண்களும் கொண்டு அழகிய தோற்றமுடன் இருந்தான். ஆண்டவர் சாமுவேலிடம், ”தேர்ந்துகொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்!” என்றார். உடனே சாமுவேல் எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து அவன் சகோதரர் முன்னிலையில் அவனைத் திருப் பொழிவு செய்தார். அன்று முதல் ஆண்டவரின் ஆவி தாவீதின் மேல் நிறைவாக இருந்தது. சாமுவேல் இராமாவுக்கு புறப்பட்டுச் சென்றார்.

**பதில்பாடல் :** உலகெங்கும் வாழ்வோரே ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்

## நற்செய்தி : மாற்கு 2 : 23 - 28

அக்காலத்தில் ஓய்வு நாளில் இயேசு வயல் வழியே செல்ல நேர்ந்தது. அவருடைய சீடர் கதிர்களைக் கொய்துகொண்டே வழி நடந்தனர். அப்பொழுது பரிசேயர் இயேசுவிடம், ”பாரும், ஓய்வு நாளில் செய்யக்கூடாததை ஏன் இவர்கள் செய்கிறார்கள்?” என்று கேட்டனர். அதற்கு அவர் அவர்களிடம், ”தாமும் தம்முடன் இருந்தவர்களும் உணவின்றிப் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்ததே இல்லையா? அபியத்தார் தலைமைக் குருவாய் இருந்தபோது தாவீது இறைஇல்லத்திற்குள் சென்று, குருக்களைத் தவிர வேறு எவரும் உண்ணக்கூடாத அர்ப்பண அப்பங்களைத் தாம் உண்டதுமன்றித் தம்மோடு இருந்தவர்களுக்கும் கொடுத்தார் அல்லவா?” என்றார். மேலும் அவர் அவர்களை நோக்கி, ”ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப் படவில்லை. ஆதலால் ஓய்வு நாளும் மானிட மகனுக்குக் கட்டுப்பட்டதே” என்றார்.

**தியானம்:** சட்டங்களும், நெறிமுறைகளும் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டனவே அன்றி சட்டங்களுக்காகவும், நெறி முறைகளுக்காகவும் மனிதன் உண்டாக்கப்படவில்லை. இறைமகன் இயேசுவின் காலத்தில் யூதமத சட்டங்கள் மிகவும் இறுக்கமானதாக இருந்ததால் மக்கள் அதனைப் பின்பற்ற கடினமான சூழ்நிலை இருந்ததனையும் அப்படியான ஒரு கடினமான வழிமுறை அவசியமற்றது என இடித்துரைத்து, ஒருபுதிய வழிமுறையை உருவாக்கும் “புரட்சியாளர் இறைமகன் இயேசுவை” இன்றைய நற்செய்தியில் சந்திக்கின்றோம். அதே வேளையில் திருச்சட்டமல்ல மனித நேயமே முக்கியம் என்ற உண்மைக் கருத்தில் அல்லது அதனைச் செயல்படுத்துவதில் நாம் எவ்வளவு தூரம் திறந்த மனப்போக்கு உடையவர்களாக இருக்கின்றோம் என்பதனையும் சிந்திக்க இன்றைய நற்செய்தி எம்மை அழைக்கின்றது. இறைவனின் மீட்புத் திட்டத்தில் நாமனைவருமே சமமான அரச குருத்துவத் திருக்கூட்டம். எனினும் எமது கடந்த கால பாவ நடவடிக்கைகளது காரணமாக, அல்லது நாம் தெளிவற்ற தப்பறை நம்பிக்கைகளோடு வாழ்வதனால் இறைமகன் இயேசுவை எமது ஆண்டவர் என ஏற்றுக்கொள்ள தயங்கலாம். அதுமட்டுமல்ல, இறைமகனை ஒரு தண்டிக்கும் கடவுளாக, எமது பாவங்களை மன்னிக்க மாட்டார் என்ற பய உணர்வும் எமக்கு இருக்கலாம். அல்லது, மற்றவர்கள் எம்மைப் பார்த்து அவ்வாறு தீர்ப்பிடலாம். எனினும், இவ்வாறான தவறான தீர்ப்பிற்கு “புரட்சியாளர் இறைமகன் இயேசு” இன்றைய நற்செய்தியில் “தாமும் தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார்” (மாற்கு2:25) எனத்தெளிவாகப் பதிலளிக்கின்றார். ஏனெனில், கிறிஸ்தவர்கள் எனக்கூறிக்கொண்டு நாம் பின்பற்றும் சட்டங்களும், சம்பிரதாயங்களும் முக்கியமல்ல. மாறாக, நாம் என்ன நிலையில் இறைமகன் இயேசுவை எமது ஆண்டவர் என ஏற்றுக்கொள்கிறோம் என்பதே முக்கியம். இந்த உண்மையை இறைமகன் இயேசு பல தடவைகளில் நிரூபித்துள்ளார். குறிப்பாக தமது மரணவேளையில் வலதுபுறக் கள்வனை மன்னித்ததன் மூலம் விசேடமாக நிரூபித்துள்ளார். இதனால்தான் மகாத்மா காந்தி அடிகள் கூட கிறிஸ்துவை நான் நேசிக்கிறேன் ஆனால் கிறிஸ்தவர்களை நேசிக்கத் தயங்குகிறேன் என்று குறிப்பிட்டாரோ?. இந்த உண்மையை உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் உண்மைக் கிறிஸ்தவர்களாக நாமும் வாழ முயலுவோம். நெருங்கிவிட்ட விண்ணரசில் தகுதிபெற முன்மதியோடு நடப்போம்.